**சாவகச்சேரி நகர சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் சாவகச்சேரி நகரசபையின் நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்புத எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | அடுத்து வரும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,375,313 பெறுமதியான 67 இயந்திரங்கள், ரூபா 1,687,954 பெறுமதியான 23 மோட்டார் வாகனங்கள் ரூபா 701,391 பெறுமதியான 1,097 தளபாடங்களும் ரூபா 1,066,181 பெறுமதியான நூலகப் | அனைத்து சொத்துக்கள் தொடர்பாகவும் உரிய பதிவுப்புத்தகங்கள் பேணப்பட்டு பௌதீக | ரூபா 2,375,313 பெறுமதியான சொத்துக்கள் இறுதிக்கணக்கில் காட்டப்பட்டுள்ளது. அவை பௌதீக ரீதியாக காணப்படாமையால் |

| | | |
|---|---|---|
| புத்தகங்கள் இறுதிக் கணக்கில் காட்டப்பட்டுள்ள போது பௌதீக ரீதியாக காணப்பட்டிருக்கவில்லை. | ரீதியாக செவ்வை பார்க்க வேண்டும். | பதிவழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனானதொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நுகரசபை ஒழுங்கு விதி அத்தியாயம் (III) பிரிவு 54 (3) | ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு தவிசாளரினால் பற்றாணைச் சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (இ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 29 திசெம்பர் 2016 இன் 30 2016 ஆம் இலக்கம் | சபையின் 10 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,145,188 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 37,563,976 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,936,400 | - | 7,053,963 | 11,824,334 | 7,204,000 | - | 7,125,455 | 11,075,392 |
| வாடகைகள் | 14,314,200 | - | 26,854.257 | 831,479 | 23,991,200 | - | 26,409,694 | 870,290 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 806,100 | - | 872,031 | 1,500 | 783,000 | - | 643,160 | 19,550 |
| ஏனைய வருமானம் | 91,362,000 | - | 50,776,185 | 9,053,738 | 69,361,400 | - | 70,581,370 | 3,889,975 |
| | **113,418,700** | **-** | **85,556,436** | **21,711,051** | **101,339,600** | **-** | **104,759,679** | **15,855,207** |

பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 104,759,679ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 85,556,436 ஆக குறைவடைந்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமானசேகரிப்பின் செயலாற்றல் ரூபா 19,203,243 இனால் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும் பட்டியல்படுத்தப்பட்ட வருமானமும் திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக் கூற்றில் நிலுவைகள் காணப்படுவதனை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினையும் உறுதிப்படுத்த வேண்டும். | புதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் ஆதனவரி நிலுவை ரூபா 11,824,334 இனை அறவிட சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் உரிய காலத்தில் அறவிடப்படல் வேண்டும். | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கடை வாடகை நிலுவை ரூபா 831,479 இனை அறவிட சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வாடகை நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ரூபா 25,400 பெறுமதியான தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கான உரிமங்களினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கான உரிமங்களினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபை கட்டளைச் சட்டம் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம், 15 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் 15 விடயங்களுக்கும் உப விதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நகர சபை கட்டளைசட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம், 15 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 15 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 15 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டும். | இச் செயற்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (i) | பிலிசறு திட்டத்தில் திண்மக்கழிவு நிலையம் அமைக்கப்பட்டிருந்தும் சபையில் உள்ள அரிக்கும் இயந்திரம் பொருத்தப்படாது பாதுகாப்பற்ற முறையில் தலைமை அலுவலகத்தில் காணப்படுகின்றது. | சபையின் சொத்துக்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். | இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ii) | 2016 ஆம் ஆண்டில் பிலிசறு திட்டத்தில் கிடைக்கப் பெற்ற நிதி ரூபா 66,968 பயன்படுத்தப்படாதுள்ளது. | பெறப்பட்ட நிதி உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | இந்நிதி அந்நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன் பைகள்,கண்ணாடிப் பொருட்கள் என்பவற்றினை சேகரித்துதரம் பிரிக்கப்பட்டிருந்தும் அவற்றினை மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவுகள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படவேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**
**-------------------------------------------**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | கழிவகற்றும் பிரதேசங்களில் நுளம்புகள் பரவுவதைத் தடுப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்
**------------------------------------------------------------**

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | 01 உழவு இயந்திரம், 02 தண்ணீர் பௌசர்கள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்படாமல் உள்ளது. | வாகனங்கள் உரிய முறையில் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட வேண்டும். | உழவு இயந்திர பாவனையை குறைப்பது தொடர்பாகவும் 02 பௌசர்களை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஆ) | ரூபா 67,328,710 பெறுமதியான நிலையான வைப்பு நிதியானது நகர அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படாது வட்டி வருமானம் உழைக்கும் நோக்கில் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்தது. | சபையின் நிதியானது நகர அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட வேண்டும். | நிலையான வைப்பிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 22 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. | புதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | சபையினால் இறந்த, பதவிவறிதாக்கப்பட்ட 05 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவைரூபா 96,668 இனை அறவீடு செய்வதற்கு கடந்த 7 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடனை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஊழியர் கடன் நிலுவையை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறன்றது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையானயானது 03 ஊழியருக்கு உரித்தான ஊழியர் சேமலாப நிதி தொகையினை உரியவர்களுக்குச் செலுத்தாது வைப்பு கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. | ஊழியர் சேமலாப நிதி உரியவர்களுக்கு செலுத்தப்பட வேண்டும். | இந்நிதியை உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | WDRB – 4214 இலக்க உழவு இயந்திரத்தை திருத்துவதற்கு பொறியியலாளரின் அனுமதி கிடைத்திருந்தும் திருத்தப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களிற்கு உரிய காலப்பகுதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ் உழவு இயந்திரத்திரத்தின் பாவனையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஆ) | EPJP – 8201,EPJS - 7934, ஆகிய இலக்க வாகனங்கள் பழுதடைந்திருந்தும் திருத்தப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் உரியவாறு உரிய காலப்பகுதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 02 வாகனங்களும் பதிவழிப்பு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பாதீட்டின் மீண்டுவரும் செலவுகளான பயணச்செலவு, மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல், மானியமும் உதவு தொகைகளும், ஓய்வூதியங்கள் என்பவை உண்மையான செலவிலிருந்து கூடுதலான வீதமானது சேமிப்பாகக் காணப்பட்டிருந்தது. இதனால் ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடல் கட்டுப்பாட்டு கருவிகளை வினைத்திறனாக செற்படுத்துவதனை கருத்தில் கொண்டு பாதீட்டு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |